TNVR150010932025
Presented on : 07-04-2025
Registered on : 07-04-2025
Decided on : 24-06-2026
Duration : 1 years, 2 months, 17 days

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அருப்புக்கோட்டை**

**முன்னிலை : செல்வி.D.ஜெயபிரதா, B.A.,B.L.,(Hons)**

**நீதித்துறை நடுவர், அருப்புக்கோட்டை**

**2026 -ம் வருடம் ஜுன் திங்கள் 24 ம் நாள் புதன்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.140/2025**

******

அரசுக்காக சார்பு ஆய்வாளர்,
ம.ரெட்டியாபட்டி காவல் நிலையம்,
குற்ற எண்.25/2025
பிரிவுகள். 281, 106(1) BNS ... புகார்தாரர்

**-எதிர்-**

வெற்றிசெல்வி, (22/2026)
த/பெ. நீலகண்டன்,
2/95, வடக்குத் தெரு, தும்முசின்னம்பட்டி, (இருப்பு)
க. விலக்கு, அருப்புக்கோட்டை. ... எதிரி

**வழக்கு விசாரணை விவரங்கள்**

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:- R.O.C. No. 814/2020/RG/F1, நாள்:

07.04.2021-ன் படி.)

| | | | |
|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிறையில் இருந்த காலம் | : | இவ்வழக்கில் எதிரி 02.02.2025 ம் தேதி கைது செய்யப்பட்டு அன்றைய தினமே காவல் நிலைய பிணையில் விடுவிக்கப் பட்டுள்ளார். |
| ii. | புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 07.04.2025 |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |
| iv. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம், பிரிவுகள் 251, 263, 269 மற்றும் 67 பா.நா.சு.ச.ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி(பொருந்துவதை குறிப்பிடவும்) | : | 12.08.2025 |
| v. | பா.நா.சு.ச. பிரிவு 355 -ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு உள்பட | : | u/s.359 பா.நி.சு.சா.வின் கீழ் 08.06.2026 ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டு அன்றே தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.<br>u/s.330 பா.நி.சு.சா.வின் கீழ் 17.06.2026 ம் தேதி மனு தாக்கல் செய்யப்பட்டு அன்றே தேதி அனுமதிக்கப்பட்டது. |
| vi. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் | : | |

| | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
|---|---|---|
| அ.சா.1 | 08.06.2026 | 08.06.2026 |

| | | |
|---|---|---|
| அ.சா.2 | 08.06.2026 | 08.06.2026 |
| அ.சா.3 | 08.06.2026 | 08.06.2026 |
| அ.சா.4 | 08.06.2026 | 08.06.2026 |
| அ.சா.5 | 08.06.2026 | 08.06.2026 |
| அ.சா.6 | 10.06.2026 | 10.06.2026 |
| அ.சா.7 | 17.06.2026 | 17.06.2026 |

| | | | |
|---|---|---|---|
| vii. | பா.நா.சு.ச. பிரிவு 351 (1) (b)-ன் படி குற்றஞ்சாட்டப் பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | : | 18.06.2026 |
| viii. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | இல்லை |
| ix. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | : | இல்லை |

**(குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி எண்.106(1)-ன் படி விபரங்கள்)**

| | | | |
|---|---|---|---|
| 1. | வ.எண். | : | CC 140/2025 |
| 2. | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | : | ம.ரெட்டியாபட்டி காவல் நிலைய குற்ற எண்.25/2025 |

3. **குற்றம் சாட்டப்பட்டவரின் விபரங்கள்**

| | | |
|---|---|---|
| பெயர் | : | **வெற்றிசெல்வி**, (22/2026) |
| | | **த/பெ. நீலகண்டன்,** |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | 2/95, **வடக்குத் தெரு,** |
| | | **தும்முசின்னம்பட்டி**, (இருப்பு) |
| தொழில் | : | **க. விலக்கு,** அருப்புக்கோட்டை. |
| இருப்பிட முகவரி | : | |
| வயது | | |

**தேதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 4. | குற்ற நிகழ்வு | : | 28.01.2025 |
| 5. | புகார் அளிக்கப்பட்டது | : | 28.01.2025 |
| 6. | கைது செய்யப்பட்டது | : | 02.02.2025 |
| 7. | பிணையில் விடுவிக்கப்பட்டது | : | 02.02.2025 |
| 8. | விசாரணைக்கு அனுப்பப்பட்டது | : | பொருந்தாது |
| 9. | விசாரணை தொடங்கப்பட்டது | : | 08.06.2026 |
| 10. | விசாரணை முடிக்கப்பட்டது | : | 18.06.2026 |
| 11. | தண்டனை (அ) உத்தரவு | : | 24.06.2026 |

12. தீர்ப்பு (அ) உத்தரவு நகல் வழங்கப்பட்ட தேதி : விடுதலை தீர்ப்பு அதனால் நகல் வழங்கப்படவில்லை

இவ்வழக்கானது கடந்த 07.04.2025 ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக 18.06.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை.1, அருப்புக்கோட்டை திரு.V.செந்தில்குமார், B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.G.ராதா, B.A.,B.L., அவர்கள் முன்னிலையாகியும், செய்த வாதங்களையும் கேட்டறிந்து, சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்த நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

## தீர்ப்புரை

### 1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்ருமாறு

இவ்வழக்கில் இறந்து போன வீரலட்சுமியும், அவரின் மகளும் இவ்வழக்கின் எதிரியுமான வெற்றிச்செல்வியும் தும்முசின்னம் பட்டியில் உள்ள ரேசன் கடைக்கு பொருட்கள் வாங்க அவரது உறவினர் வரதராஜ் என்பவருக்கு சொந்தமாக TN 67 BV 7222 என்ற பதிவெண் கொண்ட TVS XL Heavy Duty என்ற இருச்சக்கர வாகனத்தில், எதிரி அவரது அம்மாவை பின்னால் உட்கார வைத்துக் கொண்டு கானாவிலக்கிலிருந்து தும்முசின்னம்பட்டிக்கு வடக்கிலிருந்து தெற்கு நோக்கி சென்ற போது, அன்று மாலை 04.20 மணியளவில் தும்முசின்னம்பட்டி அருந்தியர் சுடுகாடு அருகே எதிரியான வெற்றிச்செல்வி இருச்சக்கர வாகனத்தை

அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும், ஓட்டிச் சென்று இருச்சக்கர வாகனத்தை சடனாக பிரேக் போட்டு, அந்த இருச்சக்கர வாகனத்தில் இருந்து அவரது அம்மா வீரலட்சுமியை நிலைத்தடுமாறி பின்பக்கமாக கீழே விழச் செய்து , பின் தலையில் பலத்த இரத்தக்காயத்தை ஏற்படச் செய்து, அவருக்கு இறப்பை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS ன் கீழ் ம.ரெட்டியாபட்டி காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்றஇறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>2. வழக்கு கோப்பிற்கு எடுத்த உத்தரவு</u>**

குற்ற இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்ளை பரிசீலனை செய்ததில் எதிரி மீது நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கில் எதிரி முன்னிலையானதும் வழக்காவணங்கள் 230BNSS ன் கீழ் எதிரிக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**<u>3. குற்றச்சாட்டு வனையதல்</u>**

போதிய கால அவகாசம் கொடுத்து எதிரியிடம் குற்றம் பற்றி எடுத்துக்கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்துள்ளதாலும், ஆவணங்களின் அடிப்படையில் எதிரி மீது குற்றச்சாட்டுகள் வனைய போதிய ஆதாரங்கள் இருந்ததாலும், பா.நா.சு.ச. 263 ன் படி எதிரி மீது **சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS** ன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து பா.நா.சு.ச பிரிவு 263 (2)ன் படி எதிரிக்கு தமிழில் விளக்கிக்

கேட்டபோது எதிரி குற்றச்சாட்டை மறுத்துள்ளதால் பா.நா.சு.ச பிரிவு 265 ன் கீழ் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**4. அரசு தரப்பு சாட்சிகள்**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.7 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்று பொருள்கள் எதுவும் குறியீடு செய்யபடவில்லை.

**5. அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களின் சுருக்கம் பின்வருமாறு:**

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 நீலகண்டன் அவரது சாட்சியத்தில், கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு அவரது மகளான வெற்றிச்செல்வியும், அவரது மனைவியுமான வீரலெட்சுமியும் ரேஷன் கடையில் பொருள் வாங்க வேண்டும் என்று அவர்களது வீட்டில் இருந்த இருச்சக்கர வாகனத்தில் சென்றிருந்ததாகவும், அப்போது தும்முசின்னம்பட்டி சாலை அருகே அவர்கள் சென்ற இருச்சக்கர வாகனமானது விபத்திற்குள்ளாகிவிட்டதாக அவரது ஊரில் உள்ள ஒரு நபர் அவருக்கு தகவல் தெரிவித்தார் என்றும், அன்றைய தினம் அவரது மகன் நிதானமாக தான் அவருடைய வாகனத்தை ஓட்டி சென்றார் என்றும், திடீரென்று சாலையில் குறுக்கே நாய் ஒன்று வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றும், விபத்திற்கு அவரது மகள் காரணம் இல்லை என்றும், அவரது மகள் மீது எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்றும், புகார்மனுவில் உள்ள கையெழுத்து

அவருடையது தான் என்றும், அந்த கையெழுத்தை போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வெள்ளை தாளில் செய்து கொடுத்ததாகவும், புகாரில் உள்ள சங்கதிகளை அவர் கூறவில்லை என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.5 வரையிலானவர்கள் அவர்களது சாட்சியங்களில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு அவர்களது ஊர்க்காரரான நீலகண்டனின் மனைவி விபத்தில் இறந்துவிட்டதாக அவர்கள் கேள்விபட்டதாகவும், மேற்படி விபத்தை அவர்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றும், போலீசார் அவர்களை விசாரணை செய்யவில்லை என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்கள். இவ்வழக்கின் பார்வைமகஜர் சாட்சியான அ.சா.6 இராமலிங்கம் அவரது சாட்சியத்தில், பார்வைமகஜர் ஆவணத்தில் உள்ள 2வது கையெழுத்தை கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பு எம்.ரெட்டியாபட்டி காவல் நிலையத்திற்கு அவர்கள் ஒரு பிரச்சனையாக சென்றிருந்த போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க செய்து கொடுத்ததாகவும், அவர் முன்பாக எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை என்றும், கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்து என்று அவருக்கு தெரியாது என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.6. மணிகண்டன் (காவல் ஆய்வாளர்), கடந்த 28.01.2025ம் தேதி அவர் ரெட்டியாபட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த போது அன்றைய தினம் சார்பு ஆய்வாளர் இராமேஷ்வரன் அவர்கள் நிலைய பொறுப்பில்

இருந்த போது அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்க பெற்ற தகவலை பெற்று மேற்படி மருத்துவமனை சென்று அங்கு புகார்தாரர் கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண். 25/2025 பிரிவுகள் 281, 106(1) BNS ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் அவர் வழக்கு கோப்பினை பார்வையிட்டு விசாரணைக்கு எடுத்துக் கொண்டு அன்றைய தினம் இவ்வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கில் இறந்து போன வீரலட்சுமியின் பிரேதத்தை பார்வையிட்டு பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் பிரேத விசாரணை செய்து பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்ததாகவும், பின்னர் இறப்பிற்கான உண்மையான காரணம் அறியும் பொருட்டு பிரேத கூறாய்வு செய்ய வேண்டி பெண் முதல் நிலை காவலர் வைத்தீஸ்வரி மூலம் அருப்புக்கோட்டை அரசு மருத்துவமனை அதிகாரிக்கு தக்க வேண்டு கோள் கடிதம் கொடுத்த அனுப்பி வைத்ததாகவும், பின்னர் 03.02.2025 ம் தேதி இவ்வழக்கு விபத்தின் போது எதிரி ஓட்டி வந்த TN 67 BV 7222 என்ற பதிவெண் கொண்ட TVS XL Heavy Duty இருச்சக்கர வாகனத்தை மோட்டார் வாகன ஆய்வாளரின் ஆய்விற்கு உட்படுத்தி அருப்புக்கோட்டை வட்டார மோட்டார் வாகன ஆய்வாளர் கண்ணன் அவர்களை விசாரித்து விபத்தாய்வு அறிக்கை பெற்று ஆய்வாளரின் வாக்குமூலம் பதிவு செய்ததகாவும், பின்னர் இவ்வழக்கில் இறந்து போன வீரலெட்சுமியின் பிரேதத்தை

பிரேத கூறாய்வு செய்த மருத்துவர் சின்னகருப்பன் அவர்களை விசாரித்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்று மருத்துவரின் வாக்குமூலம் பதிவு செய்ததாகவும், பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS ன் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

**7. பா.நா.சு.ச பிரிவு 351 (1) (ஆ)**

அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்த பிறகு சாட்சியங்களில் எதிரிக்கு பாதகமாக தோன்றக்கூடிய சங்கதிகள் குறித்து பா.நா.சு.ச பிரிவு 351 (1) (ஆ) ன் படி வினவிய போது எதிரி அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சிகள் என்றும், எதிரி தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்தார். அதனால் எதிரி தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**8. தீர்மானிக்கப்பட வேண்டிய கேள்வி :**

வழக்கு ஆவணங்கள் மற்றும் பொருண்மைகளை பார்க்கும்போது, இந்த வழக்கில் பரிசீலிக்க எழும் கேள்விகள் கீழே பட்டியலிடப்பட்டுள்ளன,

**i. குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிராக பிரிவுகள் 281, 106(1) BNS ன் கீழ் குற்றத்தின் கூறுகளை அரசு தரப்பு நிறுவியுள்ளதா?**

**ii. குற்றம் சாட்டப்பட்டவருக்கு எதிரான வழக்கை அரசு தரப்பு அனைத்து நியாயமான சந்தேகங்களுக்கும் அப்பால் நிரூபித்துள்ளதா?**

இரு தரப்பு வழக்கறிஞர்களும் தங்கள் வழக்கை நிரூபிக்க தங்கள் வாதங்களை முன்வைத்தனர்.

**9. பரிசீலனை மற்றும் முடிவுகள்**

பாரதிய சாக்ஷ்ய ஆதினியம் பிரிவு 104 படி எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபனம் செய்யப்பட வேண்டிய சுமை- யானது அரசு தரப்பையே சாரும்.

**9.1** இவ்வழக்கில் எதிரியானவர் அவருடைய தாயாரான வீரலெட்சுமியை அவர் ஓட்டிச் சென்ற இருச்சக்கர வாகனத்தின் பின்னால் உட்கார வைத்துக் கொண்டு, கடந்த 28.01.2025 ம் தேதி ரேசன் கடைக்கு செல்வதற்காக கானாவிலக்கு வழி தும்முசின்னம்பட்டி பிரதான சாலை அருந்தியர் சுடுகாடு அருகே, மாலை 04.30 மணியளவில் சென்று கொண்டிருந்த போது, அவருடைய TN 67 BV 7222 என்ற பதிவெண் கொண்ட TVS XL Heavy Duty இருச்சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி சென்று திடீரென்று பிரேக் போட்டு, அந்த இருச்சக்கர வாகனத்தில் பின்னால் உட்கார்ந்து சென்ற வீரலட்சுமியை நிலை தடுமாற்றி பின்பக்கமாக கீழே விழச் செய்து, அவருக்கு பின்தலையில் பலத்த இரத்தக் காயம் ஏற்பட வைத்து, அவருக்கு இறப்பை ஏற்படுத்திய குற்றத்திற்காக எதிரி மீது இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**9.2.** எதிரி மீது சட்டப்பிரிவுகள் 281, 106(1) BNS ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் ஒன்றோடொன்று தொடர்புடையவை. மேற்கூறிய குற்றங்களின்

கூறுகளை நிரூபணம் செய்ய அரசு தரப்பில், எதிரி அவருடைய இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிசென்று இருச்சக்கர வாகனத்தின் பின்னால் உட்கார்ந்திருந்த அவருடைய தாயாரான வீரலட்சுமியை கீழே விழவைத்து அதன்விளைவாக அவருடைய தயாருக்கு இறப்பை ஏற்படுத்தினார் என்பதை அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்ய வேண்டும்.

**9.3.** மேற்படி முதல் நிலையைச் சுமையை பூர்த்தி செய்ய அரசுத்தரப்பில் நிகழ்நிலை புகார்தாரர்/ கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.1, கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.5 மற்றும் பார்வைமகஜர் சாட்சியான அ.சா.6 ஆகியோர்கள் முன் மொழியப்பட்டனர்.

**9.4.** இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் மற்றும் கேள்விப்பட்ட சாட்சியான அ.சா.1. நீலகண்டன் அவரது சாட்சியத்தில், கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு அவரது மகளான வெற்றிச்செல்வியும், அவரது மனைவியுமான வீரலெட்சுமியும் ரேஷன் கடையில் பொருள் வாங்க வேண்டும் என்று அவர்களது வீட்டில் இருந்த இருச்சக்கர வாகனத்தில் சென்றிருந்ததாகவும், அப்போது தும்முசின்னம்பட்டி சாலை அருகே அவர்கள் சென்ற இருச்சக்கர வாகனமானது விபத்திற்குள்ளாகிவிட்டதாக அவரது ஊரில் உள்ள ஒரு நபர் அவருக்கு தகவல் தெரிவித்தார் என்றும், அன்றைய தினம் அவரது மகள் நிதானமாக தான் அவருடைய வாகனத்தை ஓட்டி சென்றார் என்றும், திடீரென்று சாலையில் குறுக்கே நாய் ஒன்று வந்ததால் தான் விபத்து ஏற்பட்டது

என்றும், விபத்திற்கு அவரது மகள் காரணம் இல்லை என்றும், அவரது மகள் மீது எந்த சட்ட நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என்றும், புகார்மனுவில் உள்ள கையெழுத்து அவருடையது தான் என்றும், அந்த கையெழுத்தை போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க வெள்ளை தாளில் செய்து கொடுத்ததாகவும், புகாரில் உள்ள சங்கதிகளை அவர் கூறவில்லை என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

**9.5.** இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 முதல் அ.சா.5 வரையிலானவர்கள் அவர்களது சாட்சியங்களில் கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு அவர்களது ஊர்க்காரரான நீலகண்டனின் மனைவி விபத்தில் இறந்துவிட்டதாக அவர்கள் கேள்விபட்டதாகவும், மேற்படி விபத்தை அவர்கள் நேரடியாக பார்க்கவில்லை என்றும், போலீசார் அவர்களை விசாரணை செய்யவில்லை என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்து உண்மையில் எதிரியின் அஜாக்கிரதையாலும், கவனக்குறைவாலும் தான் இந்த விபத்து ஏற்பட்டதா என்று முடிவை எடுப்பதற்கான போதுமான சாட்சியங்களை அரசு தரப்பில் சமர்ப்பிக்க தவறி விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.6.** இவ்வழக்கின் பார்வைமகஜர் சாட்சியான அ.சா.6 இராமலிங்கம் அவரது சாட்சியத்தில், பார்வைமகஜர் ஆவணத்தில் உள்ள 2 வது கையெழுத்தை கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்பு எம்.ரெட்டியாபட்டி காவல் நிலையத்திற்கு

அவர்கள் ஒரு பிரச்சனையாக சென்றிருந்த போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க செய்து கொடுத்ததாகவும், அவர் முன்பாக எந்த ஆவணமும் தயார் செய்யவில்லை என்றும், கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்து என்று அவருக்கு தெரியாது என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். மேற்படி சாட்சி பிறழ் சாட்சியாக மாறியுள்ள நிலையில் விபத்து நடந்த இடத்தின் அமைப்பை நிரூபணம் செய்ய அரசு தரப்பில் தவறி விட்டதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.7.** மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வழக்கின் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா. 2 முதல் 5 வரையிலானவர்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறியுள்ள நிலையில் அ.சா.7 காவல் ஆய்வாளர் மணிகண்டன் அவர்களின் சாட்சியத்தை மட்டும் வைத்து இவ்வழக்கினை தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**9.8.** மேலும் இவ்வழக்கில் அ.சா.1 எதிரியுடன் சமாதானமாக செல்வதாக இந்நீதிமன்றத்தில் பா.நா.சு.ச. பிரிவு 359 ன் கீழ் மனுதாக்கல் செய்ததாலும், இவ்வழக்கில் உள்ள குற்றப்பிரிவுகள் சமாதானம் செய்ய இயலாத குற்றப்பிரிவுகள் என்பதனாலும் மேற்படிமனு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

**9.9.** மேற்படி சாட்சியங்களில் இருந்து எதிரி விபத்திற்குள்ளான அவருடைய இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் ஓட்டிசென்று

இருச்சக்கர வாகனத்தின் பின்னால் உட்கார்ந்திருந்த அவருடைய தாயாரான வீரலட்சுமியை கீழே விழவைத்து அதன்விளைவாக அவருடைய தயாருக்கு இறப்பை ஏற்படுத்தினார் என்பதனை போதுமான சாட்சி மற்றும் சான்றாவணங்களுடன் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்க அரசுத்தரப்பில் தவறிவிட்டதாலும், அரசுத்தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஒப்பிட்டுப் பரிசீலிக்கும் போது முரண்பாடு ஏற்படுவதாலும், அரசுத்தரப்பு வழக்கின் மீது தோன்றும் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு வழங்குவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**10. முடிவு:**

**முடிவாக எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள பிரிவுகள் 281, 106(1) BNS ன் கீழான குற்றச்சாட்டுக்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி எதிரியின் மீது நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்து சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து அவர் குற்றவாளி இல்லை என இந்நீதிமன்றம் முடிவு செய்து பிரிவு 278(1) BNSS ன் கீழ் எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்பதனால் வழக்கு சொத்து குறித்து உத்தரவு எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. எதிரி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 24 ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

D JEYAPRADHA Digitally signed by D JEYAPRADHA

நீதித்துறை நடுவர்,

அருப்புக்கோட்டை.

**பின் இணைப்பு :-**

**1) அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1. | நீலகண்டன் |
| அ.சா.2. | ராமசந்திரன் |
| அ.சா.3 | உண்ணாமலை |
| அ.சா.4 | சுந்தரமூர்த்தி |
| அ.சா.5 | மாதவக்கனி |
| அ.சா.6 | இராமலிங்கம் |
| அ.சா.7 | மணிகண்டன் (காவல் ஆய்வாளர்) |

**2) அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1. | புகார் மனுவில் உள்ள கையெழுத்து |
| அ.சா.ஆ.2. | பார்வைமகஜரில் உள்ள 2 வது கையெழுத்து முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.3. | புகார்மனு |

| | |
|---|---|
| அ.சா.ஆ.4. | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.5. | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ.6 | மாதிரிவரைபடம் |
| அ.சா.ஆ.7 | பிரேத விசாரணை அறிக்கை |
| அ.சா.ஆ.8 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை |
| அ.சா.ஆ.9 | பிரேத பரிசோதனை அறிக்கை |

**3) அரசு தரப்பு சான்றுபொருட்கள்** இல்லை

**4) எதிரி தரப்பு சான்றாவணங்கள்** இல்லை.

**பின் குறிப்பு**

| | |
|---|---|
| 1. | வழக்கு விசாரணையின்போது எதிரி பிணையில் இருந்தார். |
| 2. | வழக்கின் எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |
| 3. | வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. |
| 4. | இவ்வழக்கில் சொத்துக்கள் தாக்கல் இல்லை. |

D JEYAPRADHA Digitally signed by D JEYAPRADHA

நீதித்துறை நடுவர்,

அருப்புக்கோட்டை.